DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.262/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் (Lw - 4) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச.பிரிவு **317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை **Date : 22.01.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தேவராயபுரத்தில் குடியிருந்து பள்ளிபேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். தேதி நினைவில் இல்லை சுமார் 6 மாதம் இருக்கும் இரவு 08.00 மணியளவில்நான் தேவராயபுரம் பேருந்து நிறுத்தம் அருகே இருக்கும் டீ கடையில் இருந்தேன். அப்போது நாமக்கல் டு துறையூர் சாலையில் துறையூர் நோக்கி எக்.எல். இருசக்கர வாகனத்தில் அப்பா, மகன் வந்துகொண்டிருந்தார்கள். அப்போது அதே திசையில் வந்து வெள்ளை நிற புல்லட் வாகனத்தில்வந்த நபர் எக்.எல் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இரண்டு வாகனங்களில் ஓட்டி வந்த நபர்கள் சரியாகத்தான் வந்தார்கள். புல்லட் வாகனத்தின் ஓட்டுனரை எனக்கு அடையாளம் தெரியாது. விபத்து ஏற்பட்டவுடன் எக்.எல். இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது.

புல்லட் வாகனத்தில் வந்தவருக்கும் காயம் ஏற்பட்டது. காயம் ஏற்பட்ட மூன்று

நபர்களும் மயக்க நிலையில் இருந்தார்கள். ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். புல்லட் வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரித்தபோது 03.09.2024ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் முதல் விசாரணையில் சொன்ன இடத்தில் இருந்தபோது செல்வராஜ் என்பவர் TN 88 A 2221 பதிவெண்கொண்ட எக்.எல். இருசக்கர வாகனத்தில் தனது மகனை அழைத்துக்கொண்டு நாமக்கல் டு துறையூர் சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடதுபுறமாக வந்துகொண்டிருந்தபோது எதிரி பழனிச்சாமி TN 64 L 5942 பதிவெண்கொண்ட புல்லட் இருசக்கர வாகனத்தை அதே சாலையில் அதிவேகமகாவும், கவனக்குறைவாகவும் அதே திசையில் ஓட்டி வந்து செல்வராஜ் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் பேருந்து நிறுத்த நிலர்குடை அல்லது பதாகையோ உள்ளதா என்றால் இல்லை.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**